எஸ்.கலீல்ராஜா

## மகன் அமிதாப்... அப்பா அபிஷேக்!




பா...' (தமிழில் அப்பா) படம்தான் பாலிவுட்டின் லேட்டஸ்ட் ஃபீவர். படத்தைப் பார்க்க பாலிவுட்டே நகம் கடித்தபடி காத்திருக்கிறது. பல படங்களில் அப்பா, மகனாகத் தலைகாட்டிய அமிதாப் பச்சன், அபிஷேக் பச்சன் இருவரும் இந்தப் படத்திலும் அப்பா - மகனாக நடித்திருக்கிறார்கள். ஒரு சின்ன வித்தியாசம் - இதில் அமிதாப்... மகன். அபிஷேக்... அப்பா!

லண்டனில் வித்யாபாலனைச் சந்திக்கிறார் அபிஷேக். இருவரும் காதல்கொண்டு ஊர் சுற்றித் திரிகிறார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் வித்யாபாலன் அபிஷேக்கிடம் தன்னை இழந்துவிட, கர்ப்பமாகிறார். அரசியல் கனவுகளோடு சுற்றித் திரியும் அபிஷேக் பச்சனுக்குக் குடும்பம், குட்டி என்று கமிட்மென்ட் வாழ்க்கையில் விருப்பம் இல்லை. வித்யாபாலனை ஏமாற்றிவிட்டு இந்தியா பறந்து வருகிறார். ஒரு கட்சியில் சேர்ந்து அரசியல்வாதியாக வளர்கிறார்.

லண்டனில் வித்யாபாலனுக்குக் குழந்தை பிறக்கிறது. அந்தக் குழந்தைக்கு ப்ரோஜெரியா (pro-geria) என்னும் விசித்திரமான நோய் தாக்குகிறது. இந்த நோய் தாக்கினால், இளம் வயதிலேயே முகத்தில் சுருக்கங்கள் விழுந்து, உடல் சுருங்கி, எலும்புகள் வலுவிழந்து, வயதானவர்களைப் போலவே வாழ ஆரம்பிப்பார்கள். இந்த ப்ரோஜெரியா நோய் தாக்கிய குழந்தையாக நடிக்கிறார் அமிதாப்.



IndiaLD.com Ads by Google

ஆறு வயதிலேயே 60 வயதுத் தோற்றத்தில் உடல் சுருங்கி வளர்கிறார் அமிதாப். நீண்ட வருடங்கள் கழித்து மனசாட்சி உறுத்த, காதலி

வித்யாபாலனைத் தேடி வருகிறார் அபிஷேக். அப்போது அமிதாப்புக்கு வயது 13. ஓடிப்போன அப்பா, தனிமையான அம்மா, வயதான தோற்றத்தில் பையன் இந்த மூன்று பேருக்கும் இடையே நடக்கும் நெகிழ்ச்சியான கதைதான் 'பா'.






படத்தில் அமிதாப்தான் காமெடி போர்ஷனுக்குக் குத்தகை. படத்தில் அமிதாப் அடிக்கடி பேன்ட்டிலேயே உச்சா போய்விடுவார். அமிதாப்பைத் தன் மகன் என்று சொல்லவே கூச்சப்படுவார் அப்பா அபிஷேக். சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் அமிதாப்பை வைத்துக்கொண்டு அபிஷேக் படுகிற பாட்டை செமத்தியான காமெடி எக்ஸ்பிரஸாக எடுத்திருக்கிறாராம் இயக்குநர் பால்கி.




இறுதியில் அபிஷேக்கையும், வித்யாபாலனையும் அமிதாப் எப்படி அன்பால் சேர்த்துவைக்கிறார் என்பது சென்டிமென்ட் போர்ஷன். ப்ரோஜெரியா பாதிக்கப்பட்ட குழந்தையாக நடிப்பதற்கு இத்தனை வயதிலும் நான்கு மணி நேரம் சிலிக்கான் பிளாஸ்டிக் மேக்கப் போட்டு நடித்திருக்கிறார் அமிதாப். இதற்காக லாஸ்ஏஞ்சலீஸில் இருந்து ஹாலிவுட் மேக்கப் குழுவை வர வழைத்திருக்கிறார் அமிதாப். 'கம்ப் யூட்டர் கிரா∴பிக்ஸ் பண்ண வேண் டாம். மேக்கப்பிலும், பாடி லாங்கு வேஜிலும் மட்டுமே அமிதாப் இந்தக் குழந்தை கேரக்டரைப் பண்ணிவிட்டால் ரசிகர்களுக்கு உறுத்தாமல் இருக்கும்' என்பது இயக்குநர் பால்கியின் ஆசை.


பால்கி

'கொஞ்சம் கஷ்டம்தான். முயற்சி பண்ணிப் பார்க்கிறேன்' என்று சவாலுக்குச் சம்மதித்த அமிதாப், சொன்னபடியே பெர்∴பார்மன்ஸில் பின்னி எடுத்துவிட்டாராம்.

படம் ஆரம்பித்து ஆறு மாதங்கள் ஆகியும் இதுவரை அமிதாப்பின் ஒரு ஸ்டில்கூட வெளியே வராததால் 'பா' படத்துக்கு எதிர்பார்ப்பு எகிறிக்கொண்டே இருக்கிறது.

நவம்பர் இரண்டாவது வாரத்தில் பிரசவம் ஆகிறார் குழந்தை அமிதாப்!


வித்யாபாலன்